# மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம்
# வடமாகாணம்

## 5 வருடங்களிற்கு மேல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாத வாகனங்கள்

### வாகனங்களின் பதிவினை இரத்துச்செய்தல்

2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 2017.12.31 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 05 வருட காலம் வருடாந்த வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாத வாகனங்கள் பயன்படுத்தாத வாகனங்களாக கருதி பதிவினை இரத்துச்செய்வதற்கான நடவடிக்கைகள் மோட்டார் வாகனப் பதிவாளர் நாயகம் அவர்களால் முன்னெடுக்கப்படுவதாக அறியத்தரப்பட்டுள்ளது.





### நீங்கள் செய்யவேண்டியது !

1. உடனடியாக தங்கள் வாகனத்திற்கான வருமான வரி அனுமதிப் பத்திரத்தினை அண்மையில் உள்ள பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளல்.
2. வாகனம் பழுதடைந்த நிலையில் இருக்குமாயின் நிலுவைக் கொடுப்பனவினை மட்டும் பிரதேச செயலகத்தில் செலுத்திப் பற்றுச்சிட்டையினைப் பெற்றுக்கொள்ளல்.



### தயவான கவனத்திற்கு!

தங்களால் 2018.06.30 வரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இருக்கும் பட்சத்தில் இவ்வகையான வாகனங்கள் மோட்டார் வாகனப் பதிவாளர் நாயகம் அவர்களால் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவுகள் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன்.



**மாகாண ஆணையாளர்,**
**மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் - வடமாகாணம்**



தொடர்புகளிற்கு
மாகாண ஆணையாளர் - 021-222 0831 பொது - 021-221 6695
695, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்